பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 09 2026 SATURDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி, சீன அதிபர் திரு. Xi Jinping உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இன்று இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுகள் நடத்துகிறார்.
- பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் இரண்டாவது கட்டமாக ஆறு மாநிலங்களில் 18 லட்சத்து 77 ஆயிரம் வீடுகளை கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஒடிசா மாநிலத்தில் 2 லட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டு திட்டங்களுக்கான முன்மொழிவுகள் வந்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. Mohan Charan Majhi கூறியுள்ளார்.
- இந்தியா-ஈரான் இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஈரான் அதிபர் திரு. Masoud Pezeshkian தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

பாரத் மண்டபத்தில் இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், உலகின் வளர்ந்து வரும் மற்றும் வளரும் நாடுகளைச் சேர்ந்த 11 நாடுகள் பங்கேற்கின்றன.

இந்தியாவின் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், வர்த்தகம் மற்றும் முதலீடு, தொழில்நுட்பம், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்து உலகத் தலைவர்கள் விவாதிக்க உள்ளனர்.

உலகம் பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், இந்த மாநாடு நடைபெறுகிறது.

மேற்காசியா மற்றும் ரஷ்யா - யுக்ரைன் இடையிலான நீடிக்கும் மோதல்கள், எரிசக்தி நெருக்கடி மற்றும் பருவநிலை மாற்றம் போன்ற முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

சுகாதாரம், பேரிடர்களை எதிர்கொள்ளும் திறன் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விநியோகத்தைப் பலப்படுத்துவது குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின், சீன அதிபர் திரு. ஷி ஜின்பிங், தென்னாப்பிரிக்க அதிபர் திரு. சிறில் ரமபோசா, எகிப்து அதிபர் திரு. அப்தெல் ஃபத்தாஹ் அல்-சிசி, இந்தோனேசிய அதிபர் திரு. பிரபோவோ சுபியாந்தோ மற்றும் ஈரான் அதிபர் திரு. மசூத் பெசெஷ்கியான் ஆகியோர் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

எத்தியோப்பிய பிரதமர் திரு. அபி அகமது அலி மற்றும் அபுதாபி இளவரசர் திரு. ஷேக் காலித் பின் முகமது பின் சயீத் அல் நஹ்யான் ஆகியோரும் இதில் கலந்து கொள்கின்றனர்.

பிரேசில் நாட்டின் சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மவுரோ வியேரா கலந்து கொள்கிறார்.

சவுதி அரேபியா சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் இளவரசர் திரு. ஃபைசல் பின் ஃபர்ஹான் அல் சவுத் பங்கேற்கிறார்.

மாநாட்டின் தொடக்கத்தில், பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் மட்டும் பங்கேற்கும் அமர்வு நடைபெறுகிறது.

**“உலகளாவிய உள்ளடக்கிய நிர்வாகம் மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்”** என்ற தலைப்பில் இந்த அமர்வில் விவாதம் நடைபெறுகிறது.

இதைத்தொடர்ந்து, பிரிக்ஸ் நாடுகளின் தலைவர்கள் பாரத் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள **“பாரத் இனோவேட்ஸ்”** கண்காட்சியைப் பார்வையிடுகின்றனர்.

பின்னர், தலைவர்கள் அனைவரும் ஒன்றாக மரக்கன்றுகளை நடவுள்ளனர்.

மாநாட்டில் பங்கேற்க வந்துள்ள தலைவர்களை வரவேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடி விருந்தளிக்க உள்ளார்.

பிரிக்ஸ் மாநாட்டின் இடையே, பிரதமர் திரு. **நரேந்திர மோடி** இன்றும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

மாநாட்டினிடையே, சீன அதிபர் திரு. ஷி ஜின்பிங், அபுதாபி பட்டத்து இளவரசர் திரு. ஷேக் காலித் பின் முகமது பின் சயீத் அல் நஹ்யான், எத்தியோப்பிய பிரதமர் திரு. அபி அகமது அலி, மலேசிய பிரதமர் திரு. அன்வார் இப்ராஹிம் மற்றும் வியட்நாம் பிரதமர் திரு. லே மின் ஹங் ஆகியோருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

**>>>>>><<<<<<**

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக, பல்வேறு நாடுகளின் தலைவர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் புதுதில்லி வந்துள்ளனர்.

இந்தோனேஷிய அதிபர் திரு. பிரபோவோ சுபியாந்தோ நேற்று இரவு புதுதில்லி வந்தடைந்தார். அவரை விமான நிலையத்தில் நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை இணையமைச்சர் திரு. சதீஷ் சந்திர துபே வரவேற்றார்.

அபுதாபி பட்டத்து இளவரசர் திரு. ஷேக் காலித் பின் முகமது பின் சயீத் அல் நஹ்யான் இந்தியா வந்துள்ளார். அவரது இந்தியப் பயணம், இந்தியா - ஐக்கிய அரபு அமீரக நாடுகளுக்கு

இடையேயான விரிவான உத்திசார்ந்த ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, வர்த்தகம் மற்றும் எரிசக்தி பாதுகாப்பு தொடர்பான ஒத்துழைப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

நைஜீரிய துணை அதிபர் திரு. காஷிம் ஷெட்டிமா புதுதில்லி வந்துள்ளார். அவரது, இந்தப் பயணம் இந்தியா - நைஜீரியா இடையேயான பல்வேறு துறைகளில் உள்ள ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

இரு நாடுகளின் மக்களுக்கு இடையேயான வலுவான தொடர்புகள் இந்த உறவுகளுக்கு அடிப்படையாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

>>>>>><<<<<<

பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் இரண்டாவது கட்டமாக அசாம், பீகார், குஜராத், தெலங்கானா உள்ளிட்ட ஆறு மாநிலங்களில் 18 லட்சத்து 77 ஆயிரம் வீடுகளை கட்டுவதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

நகர்ப்புறங்களில் அனைவருக்கும் வீடு என்ற இலக்கை நோக்கி, இந்தத் திட்டத்தை மேலும் விரைவாக செயல்படுத்தும் வகையில் இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற மத்திய ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை செயலாளர் திரு. சதீந்திர சிங் கூறியுள்ளார்.

உரிய காலத்திற்குள் இந்த வீடுகளை கட்டுவதற்கு மாநிலஅரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இத்திட்டத்தின் மூலம் தகுதியுடைய அனைத்து பயனாளிகளுக்கும் உரிய பலன்கள் சென்றடைவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்

>>>>>><<<<<<

காவிரி நீர் பிரச்சினைக்கு மேகதாது திட்டமே நிரந்தரத் தீர்வு என்று கர்நாடக மாநில வேளாண்துறை அமைச்சர் திரு. என். செலுவராயசாமி தெரிவித்துள்ளார்.

மாண்டியாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்திற்கு காவிரி நீர் திறந்துவிடுவது தொடர்பான வழக்கின் விசாரணை வரும் திங்கட்கிழமை நடைபெற உள்ளதாகவும், இதுதொடர்பான மேல்முறையீடு ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது எவ்வளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது என்பதை கண்காணித்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்திற்கு காவிரியில் தற்போதைக்கு 6 ஆயிரம் கனஅடி தண்ணீரைத் திறந்துவிடுவது சாத்தியமில்லை என்றும் அவர் கூறினார்.

மேகதாது திட்டத்திற்கு அனுமதி கிடைக்கும் என்றும் திரு. செலுவராயசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஒடிசா மாநிலத்தில் 2 லட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டு திட்டங்களுக்கான முன்மொழிவுகள் வந்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. Mohan Charan Majhi கூறியுள்ளார்.

ஒடிசா மாநிலத்திற்கு நேரடி அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் வகையில், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் மேற்கொண்ட பயணத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

முதலீடு, உற்பத்தி மற்றும் தொழில்நுட்பத்துறைகளில் முக்கிய மையமாக ஒடிசா மாறி வருவதாகவும் அவர் கூறினார்.

புதிதாக முன்மொழியப்பட்டுள்ள முதலீட்டு திட்டங்கள் மூலம், மாநிலத்தில் 6 லட்சத்து 18 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அபுதாபி மற்றும் துபாயில் நடைபெற்ற முதலீட்டு சந்திப்புகளின் போது எட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாகவும் திரு. Mohan Charan Majhi கூறினார்.

>>>>>><<<<<<

இந்தியா-ஈரான் இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக ஈரான் அதிபர் திரு. Masoud Pezeshkian தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக புதுதில்லி வந்துள்ள அவர், நேற்று இந்திய மதத் தலைவர்கள் மற்றும் தொழிலதிபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்தார்.

இந்தியா - ஈரான் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாக அமைந்ததாகவும், கலாச்சாரம், தொழில்நுட்பம், வர்த்தகம், அறிவியல் மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்த இருநாடுகளும் முடிவு செய்துள்ளதாகவும் திரு. Masoud Pezeshkian கூறினார்.

>>>>>><<<<<<

கடலோர ஆந்திராவில் இன்று பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

உத்தரகாண்ட், குஜராத், கோவா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களிலும் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது.

ஒடிசா, தெலங்கானா, மேற்கு வங்கம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களின் சில பகுதிகளிலும் இதே வானிலை நிலவக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி, காரைக்கால், பீகார், ராஜஸ்தான் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் இன்றும் நாளையும் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

>>>>>><<<<<<

ஆசிய கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

சென்னை ஓபன் கோல்ஃப் போட்டியில், இந்திய வீரர் விராஜ் மடப்பா சாம்பியன் பட்டம் வென்றார்.

நேற்று நடைபெற்ற இறுதிச்சுற்றில் அவர், Ajeesh Sandhu-வை வென்றார்.

>>>>>>END<<<<<<